நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற் சாலைகளுக்கான நிர்வாகத்தினர்கள் நியமனம்.

*வினா எண் 608—திரு. கே. கல்லன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு நிர்வாகஸ்தர்கள் நியமனத்தில் முறைகேடுகள் நடைபெற்றன என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, மஞ்சூர் தேயிலைத் தொழிற்சாலை, மேற்குநாடு தொழிற்சாலையில் தலைவர் உள்பட நான்கு பேர்கள் நியமனம் செய்த நாளிலேயே ஓவர் டியூவாக இருந்த நிலைமை இருப்பதாக டாக்குமெண்டரி எவிடன்ஸ் இருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் ஏற்கிறார்களா மறுக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறை இருப்பவர்கள்மீது தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் சிறு விவசாயிகள் காப்பாற்றப்பட வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். ஆனால் இந்த ஆண்டில் பல சிறு விவசாயிகள் கூட்டுறவிலிருந்து விலகிச் சென்று தனியார் துறையிடத்திலே சென்றிருக்கிறார்கள். இதற்கு காரணம் நியமனத்தில் ஏற்பட்ட குறைகள் தான் என்று சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் இதற்கு என்ன விளக்கம் அளிக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 30

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அது உண்மைக்கு மாறான தகவல் என்று அரசு கருதுகிறது. தேயிலை தொழிலில் அங்கே மட்டும் தேக்கம் இல்லை. இது பொதுவாக அகில இந்திய ரீதியிலே தேயிலைத் தொழிலில் தேக்கம், கணக்கம், மந்தம் எல்லா இடங்களிலும் இருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தத் தேயிலை தொழிற்சாலைகளுக்கு நிர்வாகஸ்தர்கள் நியமனத்தில் முறைகேடுகள் ஏற்பட்டிருக்கிறதா என்பது கேள்வி. இந்த நிறுவனம் விவசாயிகளை அங்கத்தினர்களாகக் கொண்ட கூட்டுறவு ஸ்தாபனம். அதிலே மகாசபை, தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட டைரக்டர்ஸ் போர்டு என்ற முறையிலே அது வேலை செய்கிறதா? அப்படியானால் நியமனம் என்ற பிரச்சினை எங்கேயிருந்து வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட முறைகேடுகள் இல்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் பின்னாலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதாகவும் சொன்னார்கள். இந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, சில நிறுவனங்களில், சில உறுப்பினர்கள் குறைகள் செய்கிறபோது, அந்த குறிப்பிட்ட உறுப்பினர்கள்மீது தொடர்ந்து, தொய்வில்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது, எடுக்கப்பட்டு வருகிறது. இனியும் எடுக்கப்படும். அடுத்து நியமனம் என்பது அந்த நிறுவனத்தை 'வையபிளாக' ஆக்குவதற்கும், அந்த நிறுவனத்தினுடைய சட்டத்திலே துணை விதிகள் இன்றைக்கு நியமனத்தை உருவாக்கலாம் என்ற விதி இருப்பதனால் அதை பயன்படுத்திக் கொண்டு தக்கவர்களை நியமித்து இன்றைக்கு அந்த நிறுவனத்தை பக்குவமாக ஆக்குவதற்கும் அரசு முயன்று வருகிறது.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, தற்போதுள்ள நியமன முறையால் அங்கே கூட்டுறவு தொழிற்சாலைகளுக்கு போதுமான பச்சை தேயிலை வரவில்லை என்பதை அரசு அறியுமா? பச்சை தேயிலை கூட்டுறவு தொழிற்சாலைகளுக்கு வருவதற்கு, தேயிலை தொழிலில் அனுபவம் வாய்ந்த பெரியவர்களை நியமனதாரர்களாக போடுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அனுபவமிக்கவர்கள் அங்கேயிருக்கிற சிறு தேயிலை விவசாயிகள் அவர்கள் மத்தியிலே இருந்து தான் இன்றைக்கு அரசு நியமனம் செய்து வருகிறது.